சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 18.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 32/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-4 |
| சாட்சியின் பெயர் | : | சக்கரவர்த்தி |
| தந்தை பெயர் | : | மாரிமுத்து |
| கிராமம் | : | செம்மங்குடி |
| தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | காய்கறி கடையில் வேலை |
| வயது | : | 55 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் காய்கறி கடையில் வேலை பார்த்து வருகிறேன். நான் இந்து கள்ளர் வகுப்பை சேர்ந்தவன் ஆவேன். அ.சா-1 சுந்தர்ராஜ் என்பவரை தெரியும். அவர் துப்புரவு பணியாளராக எங்கள் கிராமத்தில் பணி செய்து வருகிறார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் கள்ளர் வகுப்பை சேர்ந்தவர் ஆவார். கடந்த 15.02.2025 ஆம் தேதி மாலை 4

மணியளவில் நானும் எனது அண்ணன் மகன் அ.சா-3 ரமணனும் செம்மங்குடியில் உள்ள எங்கள் தெருவிலிருந்து எதிரி ராஜா, அ.சா-1 சுந்தர்ராஜ் ஆகியோர் குடியிருக்கும் தெரு வழியாக வயலுக்கு சென்றோம். எதிரி ராஜா குடியிருந்து வரும் வீட்டிற்கு எதிராக ஒரு மாடி வீடு கட்டி வருகிறார். அ.சா-1 சுந்தர்ராஜ் வீட்டில் இருந்து செல்லும் மின்சார ஒயர் தாழ்வாக எதிரி வீட்டிற்கு சென்றது. அப்போது ஆஜர் எதிரி அ.சா-1 -யை பார்த்து டேய் சுந்தர்ராஜ் உன் வீட்டு மின்சார ஒயரை இழுத்துக் கட்டுடா என்று சொன்னார். அதற்கு அ.சா-1 எனக்கு மின்சார வேலை தெரியாது என்று சொன்னார். அதற்கு என்னடா இப்படி திமிரா எதிர்த்து பேசுற பற தேவடியா மகனே என்று சொல்லி எதிரி காலில் கிடந்த செருப்பை கழட்டி அ.சா-1-யை அடித்தார். அ.சா-1 சந்தர்ராஜ் கீழே விழுந்துவிட்டார். எதிரி அ.சா-1-யை காலால் கழுத்தில் மிதித்துக்கொண்டு பக்கத்தில் கிடந்த அரிவாளால் அ.சா-1 வெட்டுவதற்கு ஓங்கினார். உன்னை வெட்டினால் எந்த தேவடியா மகன் டா கேட்பான் என்று பேசினார். பக்கத்தில் நின்ற நானும், அ.சா-2 பாஸ்கர், அ.சா-3 ரமணன் மற்றும் சிலர் ஓடி போய் மறைத்து அ.சா-1-னை துக்கிவிட்டோம். அப்போது அ.சா-1 சுந்தர்ராஜ் அய்யா இத்தனை பேர் இருக்கும் போது நான் கால் முடியாதவன் இப்படி அடிக்கிறார்களே என்று கேட்டார். அதற்கு நாங்கள் சொன்னால் கேட்கமாட்டார் மருத்துவனைக்கு பே என்று சொன்னோம். அதற்கு ஆஜர் எதிரி பற பயலுக்கு நீங்களாம் என்ன சப்போட்டா என்று எங்களை பார்த்துக் கேட்டார். மறுநாள் நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்தார். நடந்த விவரம் சென்னேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

போலீசார் விசாரித்தபோது நான் என் வயலுக்கு செல்வதற்காக சம்பவ இடம் வழியாக சென்று கொண்டிருந்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் என் வயல் என்று நான் கூறவில்லை. என்னுடைய முதல் விசாரணையில் என் அண்ணன் வயலுக்கு செல்வதாக கூறியுள்ளேன் என்று சொன்னால் நான் என் அண்ணன் வயலை தான் என் வயல் என்று குறிப்பிட்டுள்ளேன். எனக்கும் என் அண்ணனுக்கும் அந்த கிராமத்தில் வயல் உள்ளதா என்றால் வயல் உள்ளது. அந்த நிலத்தை வலங்கைமானை சேர்ந்த ரவி என்பவரிடம் அடகு

வைத்துள்ளேனா என்றால் நான் ரமேஷ் என்பவரிடம் அடகு வைத்துள்ளேன். அந்த இடத்தை ரமேஷ் என்பவர் தான் சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் நிரந்தரமாக திருச்சியில் தான் உள்ளேனா என்றால் வாரம் வாரம் ஞாயிற்று கிழமை ஊருக்கு வருவேன். மேலும் விசேஷ நேரங்களில் வீட்டிற்கு வருவேன். ஆஜர் எதிரியின் பாட்டி சீதாலெட்சுமி அம்மாள் செல்லியம்மன் கோவிலுக்கு 50 பவுன் தங்க நடை கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. கோவில் நகை காணாமல் போனது சம்மந்தமாக பஞ்சாயத்து ஒன்று நடந்ததா என்று சொன்னால் கோவில் நகை காணாமல் போனது சம்மந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன். செம்மங்குடியில் உள்ள செல்லியம்மன் கோவிலில் பாரம்பரிய முறை பின்பற்ற வேண்டும் என்று எதிரி மேற்கில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்திற்கு அப்பால் சாமி செல்ல கூடாது என்று பிரச்சனை ஏற்பட்டு, வலங்கைமான் காவல் நிலைய ஆய்வாளர் இதில் தலையிட்டு சாமி சிலை மேற்கில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்திற்கு அப்பால் செல்ல கூடாது என கூறியுள்ளார் என்று சொன்னால் தவறு. கோவில் பிரச்சனை தொடர்பாக எனக்கும் எதிரிக்கும் முன் விரோதம் இருக்கா என்றால் இல்லை. அ.சா-1 சுந்தர்ராஜ் செம்மங்குடி கிராமத்தில் துப்புரவு பணியாளராக எத்தனை வருடம் பணிபுரிந்து வருகிறார் என்றால் 5 வருடமாக பணிபுரிந்து வருகிறார். எதிரியின் வீடு கூரை வீடு என்று சொன்னால் ஆமாம். அவர் வீட்டிற்கு நேர் எதிர் திசையில் தான் அ.சா-1 சுந்தர்ராஜ் வீடு உள்ளது என்றால் சரிதான். புதுத்தெருவில் ரோட்டின் நடுவில் மின்கம்பம் உள்ளது என்றால் சரிதான். அந்த மின் கம்பத்தில் இருந்து தான் அ.சா-1ன் வீட்டிற்கு மின்சாரம் செல்கிறது என்றால் சரிதான். அதே கம்பத்தில் இருந்து தான் எதிர் திசையில் உள்ள எதிரியின் வீட்டிற்கு மின் இணைப்பு செல்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாரத்திற்கு ஒரு நாள் மட்டும் தான் செம்மங்குடிக்கு வருவதால் அங்கு உள்ள விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. கிராமத்தில் நடக்கும் நிகழ்வுகள் முழுமையாக எனக்கு எப்படி தெரியும் என்றால் என் உறவினர்கள் நண்பர்கள் போன் மூலம் சொல்வார்கள். அ.சா-1 மருத்துவனைக்கு சென்ற விவரம் நேரடியாக தெரியுமா என்றால் மருத்துவமனைக்கு சென்றார் என்று சொன்னார்கள் நேரடியாக

எனக்கு தெரியாது. நானும் அ.சா-3 ரமணன் பங்காளி உறவு என்றால் சரிதான். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் முன் விரோதம் இருந்து வந்தது என்றும், சம்பவத்தன்று நான் ஊரில் இல்லை என்றாலும் சரியல்ல. எனது அண்ணன் மகன் அ.சா-3 ரமணன் போன் மூலம் என்னிடம் சொன்னார் என்றும், அந்த தகவலின் அடிப்படையில் நான் சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி அ.சா-1-யை அடிக்கவில்லை என்றாலும், ஜாதி பெயரை சொல்லி திட்டவில்லை என்றும், சொன்னார் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.18 14:31:28 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.